முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.9/2021**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 16.04.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 16.04.2026 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர். | மூர்த்தி | வயது.. | 56 |
| தந்தை பெயர். | மண்ணாங்கட்டி | கிராமம்.. | பண்டரக்கோட்டை |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை ..**

1. நான் மறுபடியும் இரண்டாவது முறையாக சாட்சியம் அளிக்க வந்த காரணம் என்னவென்றால் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாகல், முதல் விசாரணையில் உள்ள விபரங்கள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டதாகும். தற்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் முதல் விசாரணையில் என்ன கூறியிருக்கிறேன் என்றால் எனக்கும் வாதி பழனிசாமிக்கும் சம்மந்தம் இல்லை என்று கூறியிருக்கிறேன். என் தரப்பில் என்ன ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் 2017 ஆம் ஆண்டில் இருந்து வழக்க நடக்கிறது வாதி பழனிசாமி அழைத்து வந்த சாட்சியை வாதிக்கு இரண்டு வருடமாக தான் தெரியும் என்று குறிபிட்டிருக்கிறேன். அந்த காரணத்திற்காக தான் பி.வா.சா.ஆ.1 யை வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன் அந்த ஆவணம் எந்த வழக்கு சம்மந்நதப்பட்டது என்று வழக்கு எண். தெரியாது, பழனிசாமிக்கும் சிதம்பரத்திற்கும் நடந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டது. மேற்சொன்ன வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் நடந்துகொண்டிருக்கிறது.

2. பணம் சம்மந்தமாக வழக்கு நடக்கிறது என்றால் பழக்க வழக்கத்தில் பழனிசாமி சிதம்பரத்திடம் இருந்து பணம் வாங்கியதற்கு நான் ஜாமீன் கையெழுத்து போட்டேன். ஜாமீன் எவ்வாறு போடப்பட்டது என்றால் பேப்பரில் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன், என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார் கள் என்னிடம்

ஆவணம் எதுவும் வாங்கவில்லை. பி.வா.சா.1 நான் படித்து பார்க்கவில்லை, பி.வா.சா.ஆ.1 ஆவண சாட்சியின் பெயர் தெரியாது. பி.வா.சா.ஆ.1 சாட்சியத்தின் போது இந்த வழக்கை பற்றி கேள்வி கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன அசல் வழக்கு.11/2021 இல் வாதி யார் பிரதிவாதி யார் என்று பெயர் தெரியாது. பி.வா.சா.ஆ.1 எந்த காரணத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பிரமமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் கூறவில்லை.

3. சிதம்பரத்தை எனக்கு எவ்வாறு தெரியும் என்னுடன் வேலை செய்த ராமன் மூலமாக சிதம்பரத்தை தெரியும். அதனை வழக்கில் கூறியுள்ளேன். வாதி பழனிசாமியை தெரியாது. வா.சா.ஆ.1 புரோ நோட்டை நான் பார்த்தது இல்லை அதில் 2 கையெழுத்து உள்ளது நான் கையெழுத்து போடவில்லை. Stamp இல் ஒரு கையெழுத்தும் கைரேகை வைத்து கீழே ஒரு கையெழுத்தும் உள்ளது., வா.சா.ஆ.1 உள்ள கைரேகை என்னுடையது இல்லை என்று எதிர்வழக்குரை, முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 இல் உள்ள என்னுடைதா என்றால் முகவரி என்னுடையது. கட்டநோட்டில் கையெழுத்து போட்டே புரோ நோட்டில் கையெழுத்து போடவில்லை. எவ்வாறு என்னுடைய முகவரியை குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் என்னுடன் வேலை செய்வதால் என்னுடைய முகவரியை தெரியும்.

4. பணம் வாங்கி கொடுக்கும் போது நான் அங்கு இல்லை, சொல்லிவிட்டு சென்று விட்டேன. சாட்சி வேலுவை வழக்கில் விசாரணை செய்யப்பட்டிருக்கிறாரா என்றால் செய்யப்பட்டிருக்கிறார். வேலுவின் சாட்சியத்தை இந்த வழக்கில் எடுத்துக்கொள்ள இந்த வழக்கில் அவசியம் இல்லை என்றாலும், தேவையில்லாமல் பி.சா.ஆ.1 இந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும் இரு வழக்கிற்கும் தரப்பினர்கள் வேவ்வேறானவர்கள் என்பதால் பிவா.சா.ஆ.1 இந்த வழக்கில் எடுத்துக்கொள்ளகூடாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உள்ள கையெழுத்தை பற்றிய ஆட்சேபணையை எதிலும் எதிலும் குறிப்பிடவில்லை என்றாலும் அதில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது என்பதால் தான்எந்த ஆட்சேபணையும் செய்யவிலலை என்றால் சரியல்ல. அசல் வழக்கு.11/2021 வழக்கின் பிரதிவாதி கனகு மற்றும் இந்த வழக்கின் பிரதிவாதி மூர்த்தி தொகையை பெற்றுகொண்டு வாதியை ஏமாற்றும் நோக்கத்தோடு துணையாக செயல்பட்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை  இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.